www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education
Advanced Subsidiary Level and Advanced Level

**TAMIL** **8677/04**
**9689/04**

Paper 4 Texts

October/November 2004

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen on both sides of the paper.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.
Dictionaries are not permitted.
You may take unannotated set texts into the examination.

Answer any **three** questions, each on a different text. You must choose one from Section 1, one from Section 2 and one other.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
You should write between 500 and 600 words for each answer.
All questions in this paper carry equal marks.
You are advised to divide your time equally between answers.
At the end of the examination, fasten all your work securely together.

*கீழே உள்ள தகவல்களை முதலில் படியுங்கள்*

உங்களுக்கு விடைத்தாள் ஏதேனும் தரப் பெற்றிருப்பின் அந்த விடைத்தாளின் முன்பக்கத்தில் கொடுக்கப்பெற்றிருக்கும் தகவல்களைப் பின்பற்றுங்கள்.

விடைத்தாளில் உங்கள் பெயர், தேர்வுஎண், தேர்வுஇடஎண் ஆகியவற்றை எழுதுங்கள்.

விடைத்தாளின் இரு பக்கங்களிலும் கருநீலம் அல்லது கருப்பு மை பேனாவினால் எழுதுங்கள்.

ஸ்டாப்ளர், பேப்பர் கிளிப், ஹைலைட்டர் அல்லது திருத்துவதற்கான வெண் மை இவற்றை உபயோகிக்க வேண்டாம்.

அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

நீங்கள் தேர்வுக்கு குறிப்புகள் எழுதப்பெறாத தேர்வுக்கான நூல்களை எடுத்துச்செல்லலாம்.

எவையேனும் 3 வினாக்களுக்கு வேறு வேறு பாடப்பகுதியிலிருந்து விடை எழுதுக. பகுதி 1லிருந்து ஒரு வினாவிற்கும் பகுதி 2லிருந்து 1 வினாவிற்கும் இன்னொரு வினாவிற்குமாக விடை தருக.

தரப்பெற்றிருக்கும் தனியான விடைத்தாள்களில் உங்களது விடைகளைத் தமிழில் எழுதுங்கள்.

ஒவ்வொரு விடையும் 500முதல் 600 சொற்களுக்குள் அமையுமாறு எழுதுதல் வேண்டும்.

இந்தத் தாளில் அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டுள்ளன.

விடைகளை எழுதும்போது அவற்றிற்கான நேரத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

தேர்வின் முடிவில் அனைத்துத் தாள்களையும் ஒன்றுடன் ஒன்று பாதுகாப்பாக இறுகக் கட்டுங்கள்.

This document consists of **4** printed pages.

UNIVERSITY of CAMBRIDGE

www.PapaCambridge.com

## பகுதி 1

*ஏதாவது ஒரு வினாவிற்கு ( அ அல்லது ஆ ) விடை தரவும்*

1 அ. குறுந்தொகை

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே - ஔவையார்

(i) அகவன் மகள், மனவுக் கோப்பு - இத்தொடர்களை விளக்கி எழுதுக.

(ii) அகவன் மகள் நன்னெடுங்குன்றம் பற்றிப் பாடிய பாடலை மீண்டும் பாடச் சொல்லும் தலைவியின் மன நிலையை விளக்குக.

ஆ. புறநானூறு

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினம் என்ன. அது எவ்வாறு வஞ்சினக் காஞ்சி எனும் துறையுடன் பொருந்தி அமைகிறது.

2 திருக்குறள்

அ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொலினதே அறம்

துன்புறூந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூ மின்சொ லவர்க்கு

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்

நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப் பிரியாச் சொல்

சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மின்மையு மின்பந் தரும்.

(i) இன்சொல்லே அறம் என்பதனை வள்ளுவர் வழி விளக்குக.

(ii) இன்சொல்லால் கிடைக்கும் இன்பமென குறள் குறிப்பிடுவன யாவை?

ஆ. உலகம் இனிது நடைபெறுவதற்கு அடிப்படையான அறத்தின் இன்றியமை யாமையினை வள்ளுவர் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார் ?

www.PapaCambridge.com



3 சிலப்பதிகாரம்

அ. தேரா மன்னா! செப்புவது உடையேன்
எள்அறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே அவ்வூர்
ஏசாச்சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்நகர்ப் புகுந்து ஈங்கு
என்கால் சிலம்புபகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பது என்பெயரே என

(i) சோழ மன்னர்களின் நீதிச் சிறப்பு எவ்வாறு கூறப்படுகிறது?

(ii) கண்ணகி தனது குடும்பம் குறித்துக்கூறி எவ்வாறு தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள்?

ஆ. கண்ணகி பாண்டிய மன்னனிடையே நடந்த உரையாடலையும் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வினையும் விளக்கி எழுதுக.

4 தேவாரம் - திருஞானசம்பந்தர்

அ. இராவணன் மேலதுநீறு வெண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந் திருமேனி யாலவாயன் திரு நீறே.

மாலொடய னறியாத வண்ணமுள்ளது நீறு
மேலுறை தேவர் கடங்கண் மெய்யது வெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர் தீர்க்குமின் பந்தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்றெம் மால வாயான்றிருநீறே.

(i) சிவபெருமானின் உருவம் பற்றிக் குறிப்பிடுக.

(ii) சிவபெருமானின் (திருநீறு) சிறப்புகளாக இங்குக் கூறிப்பிடப்படுவன யாவை

(iii) திருநீறு சிவனாகவே கருதப்பெற்று இருப்பதை மேல்கண்ட பாடல்களில் இருந்து நிறுவுக.

ஆ. இருமைக்கு முள்ளதாக ஞானசம்பந்தர் குறிப்பிடும் திருநீற்றின் மகிமைகளைத் தொகுத்து வரைக.

www.PapaCambridge.com

## பகுதி - 2

*பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன. ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ( அ அல்லது ஆ ) விடை தருக.*

**5** அ. பாரதியார்

கண்ணன் எவ்வாறு ஒரு சிறந்த சேவகனாய் அமைகிறான் எனப் பாரதி குறிப்பிடுவதனை விளக்கி வரைக.

ஆ. பாரதிதாசன்

தமிழின் இனிமையினைப் பாரதிதாசன் பார்வையில் நின்று விளக்குக.

**6** நாடகச் செல்வம் - டாக்டர் அழகப்பன்

அ. கவிதையும் கவலையும் எனும் நாடகத்தின் காட்சி அமைப்புகள் குறித்து எழுதுக.

ஆ. அன்னி மிஞிலி எவ்வாறு ஒரு சிறந்த நாடகமாக அமைகிறது என்பதனை விளக்கி எழுதுக.

**7** தமிழ்ச் சிறுகதைகள் - தொகுப்பு அகிலன்

அ. கதவு எனும் கி. ராஜநாராயணின் கதையில் கூறப்படும் கருத்துகளைச் சுருங்கத் தருக.

ஆ. நா. பார்த்தசாரதி புதியபாலம் எனும் தனது சிறுகதையில் பாத்திரங்களை எவ்வாறு படைத்திருக்கிறார் என்பதனைக் கூறுக.

**8** உச்சி வெயில் - இந்திரா பார்த்தசாரதி.

அ. இந்திரா பார்த்தசாரதியின் கதைகளுள் உம்மைக் கவர்ந்த ஏதாவதொரு கதையினைச் சுருங்கத் தருக.

ஆ. இந்தநூலுள் உம்மைக் கவர்ந்த ஒரு பாத்திரத்தின் படைப்புப் பற்றி எழுதுக.

*Copyright Acknowledgements:*

Every reasonable effort has been made to trace all copyright holders where the publishers (i.e UCLES) are aware that third-party material has been reproduced. The publishers would be pleased to hear from anyone whose rights we have unwittingly infringed.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.